விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 அடி 16 ஜுலைசு 2 இதழ் 167
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 31-7-84

## "இலங்கையில் மனித உரிமை பாதுகாக்கப்படவில்லை"

### தமிழக முதல்வர் கண்டனம்

(சென்னை)

இலங்கையில் தமது விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் போராடும் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது என்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கவலை தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: "இலங்கையில் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. இலங்கை அரசாங்கம் அங்கு மனித உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்கத் தவறிவிட்டது.

'இலங்கைஅரசாங்கம் அங்கு தமிழ் மக்களை அடக்குவதற்கு வெளிநாட்டுச் சக்திகளின் உதவியை நாடியுள்ளதென்றும்,

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்னை

# உலகுக்கு எடுத்துக்காட்ட இந்திய அரசு தவறிவிட்டது!

## தி.மு.க. எம்.பி. குற்றச்சாட்டு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்னையை உலகுக்கு எடுத்துக்காட்ட போதிய அளவு நடவடிக்கையை எடுக்க இந்திய அரசு தவறிவிட்டது என்று தி. மு. க. எம். பி. திரு. வை. கோபால்சாமி குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்திய ராஜ்ய சபையில் நேற்றுப் பேசிய போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

தமிழ்மக்கள் மீதான நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்துவரும் அமெரிக்காவை வன்மையாகக் கண்டிக்கவும் இந்திய அரசு தவறிவிட்டது என்றும் திரு. கோபால்சாமி தெரிவித்தார்.

இதேவேளை நியூயோர்க்கில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த திராவிடர் கழகச் செயலாளர் திரு. கி. வீரமணி, காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன் ஆகியோர் நேற்றுச் சென்னை வந்து சேர்ந்தனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் நன்கு அறிந்திருக்கின்றனர் என்று திரு. கி. வீரமணி விமான நிலையத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## கடற்படை வீரர் சுட்டுக் கொலை!

### ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்

(யாழ்ப்பாணம்)

"நான்கு வயது மகனுடன் தலைமயிர் வெட்டசலூனுக்குச் சென்றுகொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இரு துப்பாக்கி இளைஞர்களால் கடற்படை வீரர் பாலகுமார் சுடத்திச்செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்டார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

காரைநகர் கடற்படை உத்தியோகத்தரான ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையைச் சேர்ந்த குமாரசாமி பாலகுமார் (33 வயது) நேற்றுமுன்தினம் இணுவில் பிள்ளையார்கோவிலுக்கு முன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இவரது சடலம் யாழ். அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் பிரேத பரி

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். புகையிரத நிலையத்தில் இரு தடவை குண்டு வீச்சு!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் 'இன்ரசிற்றி' ரயில் வந்திருந்தசமயத்தில் இனந்தெரியாத நபர்களினால் இரண்டு குண்டுகள் வீசப்பட்டதால் புகையிரத நிலைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பிரயாணிகள் மத்தியில் பெரும் பதட்டநிலை ஏற்பட்டது.

### சேதமில்லை

நேற்று நண்பகல் இக்குண்டு வீச்சு சம்பவத்தினால் 'இன்ரசிற்றி' ரயிலுக்கோ, புகையிரத நிலையக்கட்டிடத்துக்கோ எதுவித சேதமும் ஏற்படவில்லை.

வழக்கம்போல் பகல் 1 மணிக்குப் புறப்படவேண்டிய இன்ரசிற்றி 20 நிமிடங்களுக்கு முன்பதாக (12-40க்கு) சுமார் 100 பிரயாணிகளுடன் புறப்பட்டுச் சென்றது. இதனால் ஏராளமான பிரயாணிகள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டி ஏற்பட்டது.

நேற்று நண்பகல் 11-55 மணியளவில் இன்ரசிற்றி ரயில் யாழ். புகையிரத நிலையத்தை வந்துசேர்ந்தது.

அதேநேரம் புகையிரத நிலையத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது.

(3ம் பக்கம் பார்க்க)

## புகையிரத சேவை தொடர்ந்துநடக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையேயான புகையிரதசேவை தொடர்ந்து நடைபெறும் என யாழ் புகையிரதநிலைய அதிபர் திரு. றெஜினோல்ட் ஆனல்ட் தெரிவித்தார்.

இன்று வழக்கம்போல் யாழ்தேவி சேவையிலீடுபடும் என்றும் அவர் சொன்னார்

நேற்று நண்பகல் புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவீச்சு சம்பவத்தினால் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவித்த புகையிரதநிலைய அதிபர் பாதுகாப்பு மற்றும் புகையிரதப் பகுதி மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பிரயாணிகளின் நன்மைகருதி சேவை நடைபெற ஒழுங்குசெய்ததாகவும் குறிப்பிட்டார். (மா)

## 'அமிர்', 'சிவா' நாளை கொழும்பு செல்வர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையத்தில் நேற்றுநண்பகல் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இன்ரசிற்றி ரயில் குறித்த நேரத்துக்கு முன்னதாகவே புறப்பட்டுச் சென்றதால், கொழும்புக்குச் செல்லவிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும் அங்கு செல்லமுடியாதநிலை ஏற்பட்டது.

இவர்களிருவரும் நாளை புதன்கிழமை செல்லும் இன்ரசிற்றியில் கொழும்பு செல்லவுள்ளதாகத் தெரிகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனின் செயலுக்கு விடுதலை அணி கண்டனம்

[யாழ்ப்பாணம்]

"1948-ல் பிரித்தானிய ஆட்சி இலங்கைத் தீவில் தம் நிர்வாக வசதிக்காக ஆட்சிப்பரப்பினை ஒன்றிணைத்தனர். இறுதியாக இலங்கைத் தீவுக்குச் சுதந்திரம் வழங்கிய பிரிட்டன் இரண்டு இனங்களுக்கும், முன்பு இருந்ததைப் போன்று தனித்தனியான ஆட்சிக்கு வழிசெய்திருக்கவேண்டும். இவற்றைச் செய்யாது, பெரும்பான்மையினரிடம் ஆட்சியை ஒப்படைத்ததால் தமிழர் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே பிரிட்டன் இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தி முன்புபோல தனியாட்சிக்கு உதவவேண்டும்"

தமிழீழ விடுதலை அணிச் செயலாளர் திரு. ச. சிவகுமார் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் 'யூனிசேவ்' திட்டம்:

## வேலைகளை தொடர்ந்து நடத்த தலைமைப்பீடம் அங்கீகாரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நடைபெற்றுவரும் 'யூனிசேப்' திட்ட அபிவிருத்தி வேலைகளை நேரில் பார்வையிட யூனிசேவ் அதிகாரிகள் அடுத்தமாதம் 10-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றனர்.

84-ம் ஆண்டு வேலைமதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, வேலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு அங்கீகாரம் நேற்று யூனிசேவ் தலைமைப் பீடத்தில் இருந்து யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானத்திற்கு கிடைத்துள்ளது.

மாரிகாலம் நெருங்கிவருவதால் யூனிசேவ் திட்ட அபிவிருத்திவேலைகள் பல பிரிவுகளாக ஆரம்பிக்கப்பட்டுத் துரிதமாக நடைபெற்றுவருகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (Bajaj) பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 32/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1131

சகல இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள் உட்பட கிறைண்டிங் மில் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். V.S. நடராசா, N.T.R கிறைண்டிங் மில், நீர்வேலிச் சந்தி.
1125

## குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் சகலவிதமான பொருட்களும் விற்பனை செய்யக்கூடியதும் துரிதமான வியாபாரம் நடப்பதுமாகிய கடை குத்தகைக்குக் கிடைக்கும். விபரங்களுக்கு; 104/1 அத்தியடி குறுக்கு வீதி, [பிள்ளையார் கோவில் முன்பாக] யாழ்ப்பாணம்.
1130

## FOR SALE

Pure Alsation Pups (6 weeks old) and 2 1/2 years Alsation Female dog. Selvadurai, 53/1, Athiady New Road, Jaffna- (1107)

## தேவை

வவனியாவில் சுவர்க்கா உல்லாச விடுதிக்கு முன் அனுபவமுள்ள வெயிட்டருடன் கூடிய றூம்போய்ஸ் தேவை. விண்ணப்ப முடிவு திகதி 05-08-1984 முகவரி: முகாமையாளர் சுவர்க்கா ரூறிஸ்ற் இன்ஸ் மில் வீதி வவனியா.
128

ஜவுளி வியாபாரத்தில் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் தேவை, திறமைக்கு ஏற்ப சம்பளமும், தங்குமிடவசதியும் வழங்கப்படும். தொடர்பு ராகுலசூரியன்ஸ், 122 பிரதான வீதி, பருத்தித்துறை.
1064

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# பிஸ்கால் விற்பனவு

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

கந்தையா கணேசமூர்த்தி, குமாரபுரம், முள்ளியவளை. — வழக்காளி.

வழ. இல: 15634. எதிராக,
காசிப்பிள்ளை கார்த்திகேசு,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
— எதிராளி

மேலே சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1980-ம் ஆண்டு, ஐப்பசி மாதம் 30-ம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் மேற் சொல்லப்பட்ட எதிராளி, வழக்காளிக்கு:-

முதலும் வட்டியுமாக ரூபா 18750/-ம் வழக்குத் தாக்கல் செய்த திகதி யாகிய 27 - 8 - 1980 தொடக்கம் தீர்வை வழங்கிய திகதியாகிய 30 - 10 - 1980 வரையும் குறிப்பிட்ட தொகைக்கு 20% வட்டிப்படி ரூபா 625/- ம் குறிப்பிட்ட தீர்வைத் தேதியிலிருந்து வழக்காளி தனக்குச் சேரவேண்டிய தொகையை அறவிட மட்டும் குறிப்பிட்ட இரு தொகைகளினதும் கூட்டுத் தொகையாகிய ரூபா 19375/-க்கு 9% வட்டியும் (பின்பு கணக்கிடப்படவுள்ளது) செலவிடப்பட்ட தொகையாக ரூபா 213 சதம் 80 - ம் நிறைவேற்றுச் செலவாக ரூபா 90 சதம் 75-ம் சந்தர்ப்ப செலவாக ரூபா 86 சதம் 35 -ம் கட்டத் தவறிப் போனமையால் எதிராளியுடைய கீழே விபரிக்கப்படும் ஆதனத்தில் சகல உரித்துக்களையும் பிரயோசனங்களையும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம், 4-ம் திகதி காலை 10-30 மணிக்கு குறித்த ஆதனத்தில் இருந்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்று குறிப்பிட்ட தொகை அறவிடப்படுமென இத்தால் அறிவிக்கிறேன்

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய் வீரபத்திராயன் குறிச்சியிறை

1. வென்றியாம்புலம் நில. பர. 8, 3/8 இதில் மேற்குப் புறமாக ஆட்சிப்படி 1/4 பங்கிற்கு நி. பர. 2, 3/32 எல்லை கிழக்கு கார்த்தி தாமனுக்குரிய வாதனம், வடக்கு காசிப்பிள்ளை கார்த்திகேசுவுக்குடையவாதனம், மேற்கு றோட்டு, தெற்கு பாலசிங்கம் பெண் தெய்வானைக்குரியவாதனம், இவ்வெல்லைக்குட்பட்டவைகளடங்கலும்,
2. மேற்படியிறை ஊரிப்புலம் நி. பர. 8, இதில் மேற்குப்புறமாக ஆட்சிப்படி 1/4 பங்குக்கு நி. பர. 2, எல்லைகிழக்கு கார்த்தி தாமனுக்குடையவாதனம், வடக்கு இராசலிங்கம் பெண் இராசம்மாவுக்கும், மறுபேருக்குமுடையவாதனம், மேற்கு றோட்டு, தெற்கு காசிப்பிள்ளை கார்த்திகேசுவுக்குடையவாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் அடங்கலும்.

**றிச்சேட். ஜெயராஜசிங்கம்,**
பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை,
20 - 07 - 84
1126




# வணிகஇயல் பட்டதாரி ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

வணிகஇயல் பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான 3 வார காலப்பயிற்சி அடுத்த மாதம் 5ம் திகதி ஆரம்பமாகும். அண்மையில் நடைபெற்ற நேர் முகப்பரீட்சையில் 75 வணிக இயல் பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# கதிர்காம உற்சவம்

[பண்டத்தரிப்பு]

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தில் கதிர்காம உற்சவம் கடந்த சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இந்த உற்சவம் அடுத்தமாதம் 15 ம் திகதி தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும்.

# உதவி

(பச்சிலைப்பள்ளி)

வவனியா வை. எம். சீ. ஏ இயக்கம் வீட்டுத்தோட்டத்தினை ஊக்குவிக்கும் முகமாக உதவி வழங்கவுள்ளது.

300 ரூபா வரை தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

# பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெரு 26ம் இலக்கத்தில் வசிக்கும் காலஞ்சென்ற டாக்டர் சுப்பிரமணியம் தனபாலசிங்கத்தின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிருவாகத்தத்துவப் பத்திரம் விடயத்தில், தனபாலசிங்கம் கைம்பெண் வசந்தாதேவி. இல; 26, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
மனுதாரர்

வழ. இல: தத்துவம்/3808
எதிராக

பராயமற்றவர்
1. தனபாலசிங்கம் மகன் முகுந்தன்

பராயமற்றவர்
2. தனபாலசிங்கம் மகன் நர்மாதன்

பாதுகாவலர்
3. எம். எஸ். பூபாலசிங்கம் எல்லோரும் இல: 26, 2ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். பராயமற்ற 1ம் 2ம் எதிர்வாதிகளின் பாதுகாவலர் 3ம் எதிர்வாதி.

எதிர்வாதிகள்

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில்தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும்1984ம் ஆண்டு ஆவணி மாதம் 3ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாகக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1984ம் ஆண்டு ஆடி மாதம் 11ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**கு.குலசிங்கம்**
பதிவாளர்

வரைந்தது
**வ.மயில்வாகனம்**
[illegible]
1117

# அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - 1983

கீழ்வரும் அகதிகளுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை உடன் அமுல் செய்யப் பண உதவி எமக்குக் கிடைக்கவிருப்பதனால், 1983-ம் ஆண்டு ஜூலை மாத இனக்கலவரத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து, யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் தமது நண்பர்களுடனே அல்லது உறவினர்களுடனோ தஞ்சம் அடைந்துள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

கீழுள்ள ஏதாவது ஒரு திட்டத்தினால் தமக்கோ அல்லது தம் குடும்பத்திற்கோ புனர்வாழ்வு ஏற்படும் எனக் கருதின், அத்திட்டத்திற்கு தங்கள் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். எமது நிதியத்திலோ அல்லது உதவி அரசாங்க காரியாலயங்களிலோ ஏற்கனவே அகதிகள் எனப் பதிவுசெய்யப்பட்டவர்கள் எதிர்வரும் ஆவணி மாதம் 10 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

## 1. குடியிருப்புக் காணி, வீடு வழங்குதல்:

இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்படும் அகதிகளுக்குப் பளையில் ½ ஏக்கர் குடியிருப்புக் காணியும், ரூபா 15,000/- பெறுமதியான சிறிய வீடும் வழங்கப்படும். குடியிருப்புக்குத் தெரிவுசெய்யப்படுபவர்கள் அண்மையில் உள்ள தென்னந் தோட்டங்களிலோ அல்லது பிற இடங்களிலோ கூலி வேலை செய்து தமது அன்றாட வாழ்க்கைச் செலவைக் கொண்டு செல்லக் கூடியவர்களாயிருப்பது அவசியம். கொடுக்கப்படும் காணி விவசாயம் செய்வதற்கு உகந்த மண்தறை அல்ல. பொதுக் கிணறுகளும், மலசலகூடமும், வாசிகசாலையும் அமைத்துக் கொடுக்கப்படும்.

## 2. கோழிப்பண்ணை ஆடு/மாடு வளர்த்தல்:

நீங்கள் தற்சமயம் தங்கியிருச்கும் இடங்களில் கோழி (50) அல்லது பசுமாடு (2) அல்லது பால்ஆடு (2) வளர்க்கக்கூடிய இடவசதி இருப்பின், அதற்கான முதலீடு ரூபா 3,000/- தொடக்கம் ரூபா 5,000/- வரை வழங்கப்படும். இத்திட்டத்திற்குக் கொடுக்கப்படும் பணத்தை வேறு தேவைகளுக்குப் பாவிக்காதவாறு உறுதி செய்யப்பட்டு இரண்டு அல்லது மூன்று தவணை முறையில் மீளப்பெறாத பணம் வழங்கப்படும்.

## 3. வியாபாரம் செய்வதற்கான கடைகள் அமைத்தல்:

நீங்கள் தற்சமயம் தங்கியிருக்கும் இடங்களில் வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சொந்தக் காணி இருப்பின், அதில் 300 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கடை கட்டுவதற்கும். கடைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் ரூபா 40,000/- வரை வழங்கப்படும்.

## 4. வெல்டிங் வேலை பழகுதல்:

யாழ். நகரிலும், கிளிநொச்சியிலும் இரு வெல்டிங் தொழிற்சாலைகள் அமைத்து அதில் ஆறு மாத இலவச பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் பின் சுய தொழிலிலோ அல்லது வேறு இடங்களிலோ வேலை செய்வதற்கான தகுதியை ஏற்படுத்திக் கொடுக்கும் இலவச திட்டமாகும்.

## 5. தையல் வேலை பழக்குதல்:

தையல் வேலையில் அனுபவம் பெற்றவர்களுக்கும், பழக விரும்பும் பெண்மணிகளுக்கும் உதவுமுகமாகக் கிளிநொச்சியில் 30 தையல் இயந்திரங்கள் கொண்ட நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுப் பயிற்சியளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் தைக்கப்படும் பொருட்களின் இலாபத்தையும் இத்திட்டத்தில் சேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கே கொடுக்கப்படும். ஆறு மாத கால முடிவின் பின், ஒவ்வொருவரும் தமது தையல் இயந்திரத்தைத் தவணை முறையில் பணம் செலுத்தித் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான வாய்ப்புகளும் உண்டு. கிளிநொச்சி, பரந்தன் சுற்றாடலில் வசிக்கும் அகதிகளுக்கு இத்திட்டம் ஏற்றதாகும்.

**உதவிச் செயலாளர் / பொருளாளர்**
அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983
வை. எம். சி. ஏ. கட்டிடம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
1113

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியில் அணு ஆயுதப்பாவனை: பேச்சுக்களுக்கு அமெரிக்கா இணக்கம்

## சோவியத் யோசனைநிபந்தனையின்றி ஏற்கப்பட்டது

வாஷிங்டன ஜூலை, 30 விண் வெளியில் அணு ஆயுதப் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு சோவியத் யூனியன் விடுத்த வேண்டு கோளை அமெரிக்கா நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டுள்ளது.

சோவியத் யூனியனுல் உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்ட இந்த அழைப்பை அமெரிக்கா முன்னர் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருந்த போதும் இது தொடர்பான உத்தியோக பூர்வமான பதிலை அமெரிக்கு வெளிவிவகார அமைச்சுகடந்த வெள்ளிக் கிழமை வெளியிட்டிருந்தது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சினுல் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் விண்வெளியில் பாவிக்கப்படும் அணு ஆயுதங்களை கட்டுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாறு சோவியத்யூனியன் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்வதாகவும், அதே சமயம் விண்வெளியில் ஆயுதக்கட்டுப்பாட்டுப் பேச்சுவார்த்தைகள் மாத்திரமன்றி சோவியத்யூனியனினுல் தற்போது நிறுத்தப்பட்டிருக்கும் தரையில் அணுஆயுதங்களை மட்டுப்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்க சோவியத்யூனியன் முன்வரவேண்டும் என்றும், ஆனுலும் இந்தகோரிக்கை விண்வெளி ஆயுதக்கட்டுப்பாட்டு பேச்சுக்களுக்கு முன் நிபந்தனையாக இருக்கமாட்டாது. என்றும் அந்தஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா மேற்குஐரோப்பிய நாடுகளில் ஏவுகணைகளை நிறுவியதைத் தொடர்ந்து சோவியத்யூனியன் தரையில் அணு ஆயுதப்பாவனையை கட்டுப்படுத்துவது தொடர்பான பேச்சுக்களை முறித்துக் கொண்டது. (சூ)

## "விண்வெளியில் அமைதி வேண்டும்" 1300 விஞ்ஞானிகள் கோரிக்கை

[மாஸ்கோ]

விண்வெளி ஆராய்ச்சிக்கான சர்வதேசக் கமிட்டியின் 25வது கூட்டத் தொடர் ஆஸ்திரியாவிலுள்ள கிராஸ் நகரில் முடிவடைந்தது. 1,300 விஞ்ஞானிகள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், தலைசிறந்த பரிசோதனைகள் பற்றி பல அறிக்கைகள் படிக்கப்பட்டன.

விண்வெளியை இராணுவமயமாக்குவதைத் தடுப்பதற்கான எல்லாநடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்ற சோவியத் அரசின் அறிக்கையை இக்கூட்டத்தில் பங்கேற்றோர் அங்கீகரித்தனர்.

இக்கூட்டத்திற்கான அமைப்புக் கமிட்டித் தலைவர் பேராசிரியர் ரியட்லர், 'ஏபின்' நிருபருக்கு அளித்த பேட்டியில் விண்வெளியை இராணுவ மயமாக்குவதைத் தடுப்பதற்கான சோவியத் அரசின் தீர்மானம்

(7ம் பக்கம் பார்க்க)

## 23-வது ஒலிம்பிக் போட்டிகள்:

## அமெரிக்கா 5 தங்கம் பெற்று முதலிடம்

## முதலாவது தங்கம் சீனு பெற்றது!



லாஸ் ஏஞ்சல்ஸ் ஜூலை, 30 23 வது ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரைநடைபெற்ற போட்டிகளில் அமெரிக்கா 5 தங்கப்பதக்கங்களைப் பெற்று முன்னணியில் நிற்கிறது.

சீனு 2 தங்கப்பதக்கத்தையும் ஒரு வெண்கலப்பதக்கத்தையும் கனடா ஒருதங்கப் பதக்கத்தையும் மே. ஜெர்மனி 1 தங்கப்பதக்கத்தையும் பெற்றுள்ளன.

23 வது ஒலிம்பிக் போட்டியில் முதலாவது தங்கப்பதக்கத்தையும் சீனுவே கைப்பற்றிக்கொண்டது. ஆண்களுக்கான துப்பாக்கிசுடும் போட்டியில் சீனு தங்கப்பதக்கத்தையும், வெண்கலப்பதக்கத்தையும் பெற்றது. பெண்களுக்கான துப்பாக்கிசுடும் போட்டியில் கனடா வீராங்கனைதங்கப் பதக்கத்தைப்பெற்ருர்.

மகளிருக்கான சைக்கிளோட்டப் போட்டியில் அமெரிக்காவைச்சேர்ந்த வீராங்கனை 'காலிகாப்பென்ட்' தங்கப்பதக்கத்தைப் பெற்ருர் மகளிருக்கான 100 மீட்டர் நிமிர்ந்த நீச்சல் ஓட்டப்போட்டியில் அமெரிக்க வீராங்கனை வெற்றி பெற்றதோடு உலகசாதனையொன்றையும் நிலைநாட்டினுர். இவர் இத்தூரத்தை 1 நிமிடம் 1.6 விநாடிகளில் நீந்திமுடித்தார்.

(சூ)

## 'ஹொக்கி'யில் இந்தியா அமெரிக்காவை வென்றது!

லாஸ் ஏஞ்சல்ஸ் ஜூலை, 30 ஒலிம்பிக் போட்டிகளில் 'ஏ'பிரிவில் நடைபெற்ற ஹொக்கி ஆட்டத்தில் இந்தியா 5-1 கோல்கள் வித்தியாசத்தில் அமெரிக்காவைத் தோற்கடித்துள்ளது.

'பி' பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்திரேலியா மலேசியாவை 5-0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. வேறொருஹாக்கி ஆரம்ப ஆட்டத்தில் மே. ஜெர்மனி ஸ்பெயினை 3-1 என்ற ரீதியில் தோற்கடித்தது.

(சூ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அன்னுய் நீ யந்திரி, நான் யந்திரம்; நீ குடியிருப்பவள், நான் குடிமனே; நீ சாரதி, நான் வண்டி. எதுவுமே நான் அல்லன், எல்லாம் நீயே, நீயே.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## குடாநாட்டுக் கலாசாரம்

பச்சைக் கண்ணுடி போட்டுக்கொண்டு பார்ப்பவர்க்கு உலகெல்லாம் பச்சையானது. கண்ணுடியின் நிறத்துக்கு ஏற்பக் காணப்படும் பொருள்களின் நிறம் மாறுகிறது.

பரந்த உலகில் இலங்கை ஒரு சிறிய நாடு. அதன் வடபகுதியின் தலைநகரான யாழ்ப்பாணம் என்றுல் இந்தப் பிரமாண்டமான உலகத்தில் அது எங்கே என்ற கேள்வி எழும்.

கொழும்பு ஒரு தேசமென்றும் அதில் இலங்கை ஒரு பிரபல தேயிலைத் தோட்டமென்றும் நினைக்கிற மக்கள் இன்றும் உலகில் அநேகம்; இந்த நிலைமையிலும் யாழ்ப்பாணம் இதற்குப் புறநடையாக ஒரு தனித்துவம்பெற்றிருக்கிறது கண்கூடு. 'புலிகள்' வாழுமிடமென்பதால் அல்லஎன்பதையும் சொல்லிவைக்க வேண்டும்; பச்சைக் கண்ணுடியின் அநர்த்தம் அது.

இன்றைய ஆட்சிக்குத் தீரா வலி போன்றது பயங்கரவாதம்; அது சாதாரணமான தினுசு அல்ல, சர்வதேச அத்திபாரம் கொண்டதென்றும் சொல்லப்படுகிறது. இதனை ஒழிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் பயங்கரவாதம்நிறைந்த யாழ்ப்பாணத்தில் பலிக்கிறதில்லையென்ற கவலை அரசுக்குண்டு.

இந்தக் கவலை திருமென்ற நம்பிக்கை ஒளி ஒன்று தெரிவதாகப் பேசப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் இன்றைய அரசியல் விவகாரங்களில் மாற்றம் அமைவதாக மனப்பால் குடிக்கப்படுகிறது. மிதவாதம் ஒழிவதானுல் தீவிரவாதத்தை முறியடிக்க ஒரு ஜனநாயக நாட்டுக்கு இடம், பொருள், ஏவல் இருக்கும்தானே!

நீரில் மூழ்கிப்போகிறவருக்கு இவ்வித கருத்திலும் மெல்லிய துரும்புபோதும்.

மின்கம்பத்தில் தொங்கும் சடலங்கள் யாழ்ப்பாணத்தில் சாதிக்கலவரம் உற்பத்தியாக உதவுமென்ற கனு பழங்கதையாகிவிட்டது; இருப்பினும் யாழ்ப்பாணத்தவரைப் பிரித்தாளுவது அவ்வளவு கடினமா?

தனி மனிதப் போட்டி, குடும்பப் போட்டி, சாதிப்போட்டி, சமயப் போட்டி, தொழிற்போட்டி போன்ற போட்டிகள் இங்கு ஏராளம்; இவற்றை விளங்க வைக்கும் திறமையும் யாழ்ப்பாணத்தவரின் தனிக்கலை.

இவ்வித போட்டி மனப்பான்மை - பொருமைதானும் - வேறெங்குமில்லையென்று நினைக்கவைக்குமளவுக்கு இங்கு உண்டு வரலாற்றிலும் இதற்கு சான்றுகள் உண்டு. எனவே இன்று வரைக்கும் இங்கு வாழும் தமிழ்ச் சமூகம் நிலைத்திருப்பதும், ஓரளவிற்கு சிறப்புற்றதும் எவ்வாறு? இன்று எம்மைக் காத்திருப்பது விடிவா அல்லது முடிவா?

யாழ்ப்பாணம் ஒரு குடாநாடு; எனவே அந்த 'நமேருமைன்ட்' இருக்கத்தான் செய்யும்; யாழ்ப்பாணத்தான் தூர மேற்கு அமெரிக்கா தொடக்கம் தூர கிழக்கு ஜப்பான் வரையிலும் சஞ்சரிக்கிருன், ஆனுல் குடாநாடு குடாநாடே! அது வேறு விடயம். அதுதான் மக்களின்பலமும் பலவீனமும்.

நாம் குறிப்பிடும் குடாநாட்டுக் கலாசாரம் இன்று அனுராதபுரத்தில் சற்றே தங்கி நேரே யாழ்ப்பாணத்துக்கு - சிலவேளைகளில் கிளிநொச்சிக்கு மட்டும் - ஓடிவரும் இன்ரர் சிற்றியில் வீடுவரும் யாழ்ப்பாணத்தவர் முகத்தில் மிளிரும்.

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினுலும் வானம்பாடி போல் வீடுவந்துசேரும் போது ஏற்படும் பயபக்தி உண்மையில் தனித்துவமானது. தெய்வம், சமூகம், குடும்பம் இம்முக்கனி பிழிந்த பழச்சுவை அது.

மண் வளமோ, நீர் வளமோ, இரண்டும் சேர்ந்ததோ இந்த மனித வளத்தின் இரகசியம்?

யாழ்ப்பாணத்தின் வறட்சியும் வறுமையுமே பல நற்பண்புகளுக்கு அத்திபாரமென்று கருதப்படுகிறது; அதே போல் அந்த வறட்சியும் வறுமையும் வாழ்க்கைக்கு சுவையளிப்பதை நாம் இக் காலத்தில் மறந்து விடுகிறேம்.

வறட்சியின்றேல் யாழ்ப்பாண மரக்கறி, முக்கனி சுவையற்றதாகும். குறிப்பாக; யாழ்ப்பாண மாம்பழத்தை செவ்வனே பயன்படுத்தியிருந்தால் நாட்டில் இனக்கலவரத்துக்கு இடமிருந்திராது.

அதே போல் வறுமை வாழ்க்கையின் ரகசியத்தை நன்ருகப் பயின்ற நம் முன்னேர் வறுமையிற் செம்மையாகவும், செல்வத்தில் செழுங்கிளை தாங்கியும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

இன்று வெளி நாட்டில், தொழில் செய்யும் யாழ்ப்பாணத்தவர் சுமார் இருபதினுயிரம் எனலாம். ஓரளவிற்கு சிக்கனவாழ்வு இன்று சிதைந்துவிட்ட போதும் இங்கு வாழும் பல வறிய குடும்பங்கள் தலைநிமிர வெளிநாட்டு உழைப்பு பெருமளவிற்கு உதவுகின்றது.

பொருளாதாரத்தில், சமுதாய ரீதியில், அரசியல் அடிப்படையில் யாழ்ப்பாணம் கண்ட மாற்றங்கள் பாரதூரமானவை.

இன்று யாழ்ப்பாணம் ஒரு தனிப்பட்ட (ஒதுக்கப்பட்டதென்று சொல்லலாம்) பிரதேசம், நாட்டுக்குப் புறம்பான, நாட்டின் 'எதிரியான' மாகாணமெனக் கருதப்படுகிறது. இங்கு வாழும் மக்கள் மனிதராலும் மிருகங்களாலும் இம்சைப்படுத்தப்படுகின்றனர், என்ற அபிப்பிராயமும் தெற்கிலிருந்து வெளியாகின்றது; இந்தத் துரதிஷ்டத்திலிருந்து இந்த 'ஆடுகளை' பாதுகாக்க வேண்டுமென்றும் கண்ணீர் விடப்படுகிறது.

குடாநாட்டின் கலாசாரம் ஒன்று உண்டு. [illegible] கல்வியில், கல்வியின் பயனு[illegible] கிய தெய்வபக்தியில் உண[illegible]டானது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே நாகரிகமாக வாழ்ந்த மக்களின் வாரிசுகளென்றுல், யாழ்ப்பாண மக்கள், தமிழ் மக்களின் தனிப்பெரும் பிரதிநிதிகள் என்பதில் என்ன ஐயம்?

குடாநாட்டுக் கலாசாரம் அழிவற்ற பொருளென்பதால் யாழ்ப்பாணம் புல்லூ[illegible] புதை அறியாதவர் என்றும் அறியாதவரே.

# கந்தவன முனிவரிடம் யான் கண்டவை

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே" என்று சம்பந்தப் பெருமான் பாடிப் பெருமிதம் அடைகின்றூர்கள். சிலநேரங்களில் இந்த அடிகள் என் உள்ளத்தைக் கனியச் செய்துபாடச்செய்வதுமுண்டு. கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்குவதும் உண்டு.

"அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்" என்றூர் வள்ளுவர்.

எவராலும் பேணித் தமராக் கொள்ளத் தக்க பெருந்தகைக் குரவரும் கந்தவன முனிவரும் ஆகிய சைவப் பெரியார் திரு சு. சிவபாதசுந்தரம் அவர்கள் சைவ வரலாற்று நூலில் தனி இடம் வகித்தற் குரியவர்கள். இத்தகைய பெரியாரிடம் சிறு வயதிலிருந்தே மாணவனுகக் கற்கும் பேறு பெற்றிருந்தேன்.

விக்ரோரியாக் கல்லூரி தலைமையாசிரியராக இருந்தகாலத்தில் சைவபெரியார் விருப்பம் உள்ளமாணவர்கள்சமயதீக்ஷை பெறுவதற்கு ஏற்பாடு செய்தார். அப்போது எனக்கு வயது ஒன்பது. யானும் ஒருவனுகச் சேர்ந்துகொண்டேன். தீக்ஷை முடிந்ததும் அதன் கருத்தையும் பெருமையையும் சிறுவர்களாகிய எங்களுக்கு மிகத்தெளிவாய் விளக்கினுர். எவராவது மச்சமாமிசம் உண்போர் இருந்தால் அதனைக்கைவிட்டு சைவ உணவினராக மாறவேண்டும்என்று கேட்டுக்கொண்டார். அன்று மாலை முதல் நான் தாவர போசனியாய் மாறினேன். "உனக்கார் இது சொன்னது" என்று தாயார் கேட்டார். "B A மாஸ்ரர்சொன்னுர்" என்றேன் "அவர்சொன்னுல் பிறகென்ன" என்ற பதில் காதில் விழுந்தது. என்னைப் பின்பற்றி எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஏனையோரும் பந்துக்களும் படிப்படியாக தாவரபோசனிகளாக சைவமரபைக் கையாளத் தொடங்கினர். இது என் சிறியகதை. இதுபோல் எத்தனை மாணவர்கள் எத்தனை வகையில் திருந்தியிருப்பார்க்ள் என்பது கணக்கிடமுடியாது.

### பெருங்குரவர்

நான் கேம்பிறிட்ஜ் சீனியர் வகுப்பிற்கற்றபோது வேற்று மதச் சூழலில் படித்து வந்த சைவமாணவர் சிலர் அம்மதத்தைத் தழுவும் தறுவாயில், பெற்றேர் முறைப்பட்டதும். "அடபாதகரே" என்று கையை உதறி அப்பிள்ளைகளை எங்கள் கல்லூரிக்கு வருவித்து சைவமாணவராக மாற்றியமைத்ததோடு அவரிற் சிலர் நாட்டின் பெரியோர்களாகவும் சைவம் வளர்க்கும் ஒழுக்கசீலர்களாகவும் வளர்தற்குவழி வகுத்தார். எத்தனை எத்தனை மாணவர்களை எத்தனை எத்தனை வகையில் நமது பெரியார் திருத்தி நல்வழிப்படுத்திஞர்கள் என்பதை நினைக்கும்போது இப்பெருங்குரவருக்கு சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளதை நினைவுகூர வேண்டும்.

> இன்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சைவப் பெரியாரின் சைவ போதம் 1ம் புத்தகம் 24ம்பதிப்பு வெளியிடப் படுகிறது. அதையொட்டி இன்று இக் கட்டுரை வெளியிடப் படுகிறது. இம் மாதம் 2ம் திகதி சைவப் பெரியாரின் குருபூசை தினமாகும்.

ளோடு உடன் பிறந்தெனலாம் எந்தக் கடின பாடத்தையும் எளிதாக்கி, இனிதாக்கித் தர்க்க ரீதியாக, நகைச்சுவையுடனும், முகமலர்ச்சியுடன் சேர்ந்த புன்னகையுடனும் விளக்கும் காட்சி ஓர் அழகான காட்சி.

### மாணவ பரம்பரை

ஆலயங்களில் உயிர்ப்பலி நடப்பதைத்தடுப்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி அளப்பரியது. உயிர்ப்பலிக்கு மாறுன உணர்ச்சியோடு வளர்ந்து வந்த மாணவர் பரம்பரையும் அவர்கள் உண்டாக்கினுர்கள்.

சமயகுரவர், சந்தானகுரவர் சிவஞான முனிவர் வழியாகத் தொகுத்து வரையறுத்தருளிய சித்தாந்த நுண்கருத்துக்களை நன்கு கற்றுத் தெளிந்து, அவற்றை மாணவரும் மற்றையோரும் எளிதில் விளங்கும் படி சைவபோதம் 1, 2, 3 (திருவருட்பயன் - உரை) என்ற புத்தகங்களை எழுதி வெளியிட்டார். இவ்வித பாட நூல்கள் முன்னரோ பின்னரோ எவராலும் எழுதப் படவில்லை யென்பதை சைவ உலகம் நன்கறியும் மற்றைய நூல்கள் பல உலகப்புகழ் பெற்றவை.

இதுமட்டுமல்ல சைவப்பாடசாலைகளை நிறுவதற்கு தூண்டுகாலாக இருந்து 'இந்து போட்' இராசரத்தினத்துக்கும் சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்கும் பேருதவி புரிந்தார்கள்.

### ஆசிரியபரம்பரை

கல்வித்துறையில் முன்னுட் கல்வி மந்திரி C. W. W. கன்னங்கரா, கல்விப்பணிப்பாளர் திரு. H. S. பெரேரா, கலாநிதி சு நடேசபிள்ளை போன்ற பெரியார்களோடு நெருங்கிய தொடர்பு உண்டானதால் பெரியாரின் கல்விக்கொள்கைகள் அரசாங்கத்தின் திட்டத்திலும் இடம் பெற்றன. சைவாசிரியபரம்பரை ஒன்றை உருவாக்க இது உதவியது.

அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சைவப்பெரியார் கந்தவனத்தில் ஒருசிறு கொட்டிலில் முனிவர்

(5-ம் பக்கம் பார்க்க)

#### பண்டித வித்துவான் க. கி. நடராஜன்

ஒருவர் தாம் அடங்க மற்றவர்களும் அடங்குவார்கள் என்ற உண்மையை யான் சைவப் பெரியாரிடம் ண்டேன். தோய்த்துலர்ந்த வெள்ளை வேட்டியும் சால்வையும், வெண்ணீறு சண்ணித்த திருநெற்றியும், சிறிய குமியும் மெலிந்து உயர்ந்த திருமேனியுங்கொண்டு குமிழி மிதியடியில் மெல்ல நடக்கும் ஒரு திருத்தோற்றம். வகுப்புக்குள் வந்துவிட்டால் துடுக்கான மாணவர் ள் அடங்கி, மிகச் சிரத்தையாக இருப்பர். கேட்டார் பிணிக்குந்திறன் அவர்க

## மனையியல் பட்டதாரி ஆசிரியர் நியமனம்

# 100 வெற்றிடங்கள் இருந்தும் இருவர் மட்டுமே தகுதி

## மாற்று ஏற்பாட்டுக்கு அனுமதி

(கொழும்பு)

பட்டதாரி ஆசிரிய நியமனத் திட்டத்தின்கீழ் தமிழ்மொழி மூலம் மனையியல் பட்டதாரி ஆசிரியர்களுக்காக 100 வெற்றிடங்கள் இருந்தபோதிலும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களிலோ பல்தொழில் நுட்பக் கல்லூரிகளிலோ பட்டம் பெற்றவர்கள் இல்லாதமையினுல் இந்தியாவில் மனையியல் பட்டம் பெற்ற இருவருக்கு மட்டுமே ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் மிகுதி காலி இடங்களை குறைந்த தராதரத்துடன் போட்டிப் பரீட்சைமூலம் நிரப்புவதற்கு கல்வி அமைச்சு, கல்விச்சேவைக்குழுவுக்கு அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும் என கல்விச் சேவைக்குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் மனையியல் கற்று டிப்ளோமா சன்றிதழ் பெற்றபலர் அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்த போதிலும் இது பட்டதாரி ஆசிரியர் நியமனம் என்பதால் உயர்கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெறுத நிறுவனங்களில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சையில் நிராகரிக்கப்பட்டனர் எனினும் இவர்களுக்கு வேறு வழியில் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட உள்ளது.

## புதிதாக நியமனம்பெற்ற ஆசிரியர்களுக்கு ஆக-5ல் சேவை முன்பயிற்சி

(கல்வியங்காடு)

அகில இலங்கை பூராகவும் புதிய ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களுக்கு நாட்டில் உள்ள 7 இடங்களில் சேவை முன்பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி அடுத்தமாதம் 5ம்திகதி முதல் 26ம் திகதி வரை மூன்றுவாரங்களுக்கு நடைபெறும்.

தமிழ், சிங்கள மொழிகளில் அவ்வவ் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் கல்லூரி அதிபர்களினுலும், விரிவுரையாளர்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சிதறல்

## வலது குறைந்தோர் தினம்

(வவுனியா)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தி வவுனியாக் கிளையினர் தனது 13ம் ஆண்டு நிறைவையும், வலது குறைந்தோர் தினத்தையும் அண்மையில் வவுனியா சமித்தி மண்டபத்தில் கொண்டாடினுர்கள்.

பிரசாந்தி கொடியேற்றத்துடன் வைபவம் ஆரம்பமாகியது. இலட்சார்ச்சனை நடைபெற்றது. அத்துடன் பஜனையும், பொங்கலும் இடம்பெற்றன.

மேற்படி சமித்தி தலைவர் வைத்தியக் கலாநிதி சோமசுந்தரம் நிரஞ்சன் தலைமையில் விழா நடைபெற்றது.

வவுனியா மாவட்ட நீதிபதி திரு எஸ்,வத்தேகெதர விசேட விருந்தினராக இதில் கலந்து சிறப்பித்தார்.

இரு மாணவிகளுக்கு கண் பரிசோதனை செய்து சமித்தியின் அன்பளிப்பாக கண்ணுடிகள் வழங்கப்பட்டன.

## வருடாந்த உற்சவம்

(சரவணை)

சரவணை தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அடுத்த மாதம் 10ம் திகதி தேர்த்திருவிழாவும், மறு தினம் திருவோணத்தன்று தீர்த்த உற்சவமும், அதனையடுத்து திருக்கல்யாண விழாவும் நடைபெறும்.

நாலாம் திருவிழாவின் போது ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனுர் குருபூசையும் நடைபெறவுள்ளது.

## ஆடிப்பூர விழா

(கிளிநொச்சி)

முரசுமோட்டை அருள்மிகு சேற்றுக்கண் முத்துமாரி அம்மன் ஆலய ஆடிப்பூர விழா இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் ருது சாந்தி வைபவமும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அத்திவாரக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தம்பனைக்குளம் மடுரேட் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த 15ம் திகதி நடைபெற்றது.

மன்னுர் உதவி அரசாங்க அதிபர் திரு பாஸ்கரதாஸ் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

## வருடாந்த இல்லப் போட்டி

(வண்ணுர்பண்ணை)

கட்டுவன்புலம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இவ்வித்தியாலய அதிபர் திரு க. இராசதுரைதலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு எம்.சிமியாம்பிள்ளை கலந்து கொண்டார்.

## ஒழுங்கை புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

சங்கானை மேற்கு கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள பல்லசுட்டி ஒழுங்கை சிரமதான மூலம் விஸ்தரிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இச் சிரமதானத்தில் யாழ். அரசாங்க செயலக உதவி அரசாங்க அதிபர் திரு கே. கோபாலரத்தினம், வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு து,வைத்திலிங்கம், சங்கானை மேற்கு கிராமசேவை அலுவலர் திரு ரி.கமலநாதன் விசேட சேவை அலுவலர் திரு ஆ.பஞ்சாயுதன், அபிவிருத்தி அதிகாரி திரு சாம்பசிவம் ஆகியோர் உட்பட பொது மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

## புதிய நிர்வாகிகள்

(சரவணை)

சரவணை 'தேவபுரம்' அருள்மிகு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையின் ஆண்டுக் கூட்டம் சட்டத்தரணி திரு செ.சசிவம் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிசள் வருமாறு; தலைவர் திரு செ.ச.சிவம், காரியதரிசி: திரு த.தெட்சணுமூர்த்தி, தனதிகாரி: திரு கே.கணேசலிங்கம், உபதலைவர்: திரு செ.தேவராசா.

பஞ்சாய அங்கத்தவர்களாக ஐவர் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

கண்ணுபுரம் ஐங்கரன் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது- பின்வருவோர் புதிய நிர்வாகிகளாத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு இரா நாகேந்திரன், உபதலைவர் திரு கா. பஞ்சலிங்கம், செயலாளர் திரு ஆ.பிமேரராஜா, உப செயலாளர் திரு.ச.கேதீஸ்வரன், பொருளாளர் திரு. இ.லோகநாதன், போசகர்கள்: திரு.துரைசத்தியசீலன், திரு. சி.தெய்வேந்திரம், திரு.மு. நடராசா 5 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

(ஊரெழு)

ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கம் புதிதாக அமைக்கப்பட்ட பணிமனையில் கடந்த வாரத்திலிருந்து செயற்படத் தொடங்கியிருக்கிறது.

கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் திரு.இ கிருஷ்ண பிள்ளை தலைமையில் புதிய பணிமனையில்நடைபெற்ற முதலாவதுகூட்டத்தில்புதியநிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு.இ.கிருஷ்ண பிள்ளை, துணைத்தலைவர்; திரு. க.ஜெகநாதன், திரு.அ வைரமுத்து. செயலாளர்: திரு.கு. பரமராசா. துணைச்செயலாளர்: திரு.பொ.தெய்வேந்திரம், பொருளாளர்: திரு ந துரைராசா, ஏழு உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

## பிறப்பு இறப்புப் பதிவாளர்

(புலோலி)

வட மராட்சி பகுதியில் உள்ள குடத்தனை பிரிவுக்கு பிறப்புஇறப்பு விவாக(பொது) பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

இப்பிறப்பு, இறப்பு,விவாக பதிவாளரை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3ம்திகதி யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை குடத்தனை உப-அலுவலகத்தில் நடைபெறுமென யாழ் மாவட்டமேலதிகப்பதிவாளர் திரு.இராசையா அறிவித்துள்ளார்.

## உணவு போஷாக்கு வாரம்

(பண்டத்தரிப்பு)

திட்டமிடல் அமைச்சு எதிர் வரும் அக்டோபர் மாதம் 29ம் திகதியிலிருந்து நவம்பர் 2ம் திகதி வரையிலான ஒருவார காலத்தை உணவு போஷாக்கு வாரமாக கொண்டாடுமாறு சுற்றுநிருபம் ஒன்றை சகல உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

## எழுத்து மூல அனுமதி பெறவேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபையின் நாடுநகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணிகளில் சபையின் அனுமதியின்றி கட்டிட வேலைகள் எதையும் தொடரவேண்டாமென்று திரு பெனடிக்தாசீசியஸ் வரியிறுப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தலில் கூறப்பட்டுள்ளதாவது. இப்பகுதியில் குடிசைகள், கிணறுகள், மலசல கூடங்கள், மதில்கள் அமைப்பது உட்பட கட்டிட விஸ்தரிப்பு, புனரமைப்பு ஆகிய சகல நடவடிக்கைகளும் மாநகரசபை ஆணையாளர் அல்லது நாடுநகரஅபிவிருத்தி அதிகார சபையின் எழுத்து மூல அனுமதி பெற வேண்டும்.

இதனை மீறி செயல்படுபவர்கள் மீது அபராததொகை புதிப்பது மட்டுமன்றி சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பனம்பொருள் கைப்பணிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விமூலவள நிலையமும், இலங்கைபனம் பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து, வேலையற்றிருக்கும் பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பைத்தேடிக் கொடுக்கும் முகமாக நடாத்தும் பனம் பொருள் கைப்பணிப் பயிற்சி நாளை புதன்கிழமை காலை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் அமைந்த கோப்பாய்கல்வி மூலவள நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சியில் தேர்ச்சி பெற்ற போதனுசிரியர்கள் பனம் பொருட்களில் கூடை பின்னுதல், பன்னமிளைத்தல், அலங்காரப் பூக்கள்செய்தல் போன்ற பலதரப்பட்ட கைப் பணிகளைப் பயிற்றுவிக்கவுள்ளார்கள்.

இப்பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதோடு, முதன்மையாகத் தேர்ச்சியடைபவருக்கு மேலதிக பயிற்சிக்கான புலமைப் பரிசிலும் கொடுக்கப்படும்.

இப்பயிற்சிக்கான ஒழுங்குகளை கோப்பாய்கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதனும், இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் உற்பத்தி உத்தியோகத்தர் திரு கு. சிவகணேசனும் செய்துள்ளனர்.

## புதிதாக...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களினுலும் நடாத்தப்படும். மகரகம, பத்தலகெதற, மீரிகமருகம, பேராதனை, அனுராதபுரம் பொலநறுவைஆகிய ஏழு இடங்களிலேயே இப்பயிற்சி நடாத்தப்படவுள்ளது. இவ் ஏழுஇடங்களிலும் பலதரப்பட்ட பாடநெறிகளுக்கும் தெரிவாகியுள்ள தமிழ், சிங்கள மொழிமூலமான ஆசிரியர்கள் பயிற்சி பெறுவார்கள்.

ஏனைய வருடங்களில் இச் 'சேவைமுன்பயிற்சி' குறைவான இடங்களிலேயே நடாத்தப்பட்டுவந்தது.

இம்முறை கூடுதலான ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பயிற்சி ஸ்தானங்களும் கூடுதலாக நியமிக்கப் பட்டுள்ளன.

ஆசிரியர்களாக பட்டதாரிகள், க. பொ. த. உயர்தரம் படித்தவர்கள், நடனம், மனையியல், சங்கீதம் போன்ற பயிற்சிகள் பெற்றவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஆசிரியராக நியமனம் பெறுபவர் நேரடியாகவே பாடசாலைக்கு அனுப்பப்படுவது வழக்கம். ஆனால் தற்போது பாடசாலைகளில் ஆசிரியராக வேலையை பொறுப்பேற்க முன்பு 'சேவை முன் பயிற்சி' பெற்றே பாடசாலைகளுக்குச்செல்ல முடியும்.

நாட்டின் ஏழு ஸ்தானங்களிலும் நடைபெறும் 'சேவை முன் பயிற்சி'யில் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 775 பேர் பயிற்சி பெறுவர்.

மீரிகம பயிற்சி நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எம். பரராசசிங்கம் இத் தகவல்களைத் தெரிவித்தார்.

## 80 பயணிகளுடன் விமானம் கடத்தப்பட்டது!

கரகாஸ், ஜூலை 30 80 பயணிகளைக் கொண்ட வெனிசுவெலா விமானமொன்று கடத்தி செல்லப்பட்டுள்ளது.

இந்த விமானம் வெனிசுவெலாவின் தலைநகர் கரகாசில் இருந்து புறப்பட்ட சில மணி நேரங்களில் இரண்டு இனந் தெரியாத இளைஞர்களினுல் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாம்.

தற்போது இந்த விமானம் அருகிலுள்ள தீவொன்றில் தரையிறக்கப்பட்டதாகவும் விமானத்தைக் கடத்தியவர்கள் மெச்சிக்கோவுக்கு விமானத்தை கொண்டு செல்ல விரும்புவதாகவு . தெரிவித்துள்ளனராம். [சூ]

## தமிழ்நாட்டில் 3-வது தொலைக்காட்சி நிலையம்

(சென்னை)

தமிழ் நாட்டின் 3-வது தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் நேற்று சேலம் ஏற்காட்டில் திறந்து வைக்கப்பட்டது.

மத்திய வெளியுறவு இணை அமைச்சர் ஜனுப் ஏ. ஏ. ரஹீம் இதனை முறைப்படி தொடக்கி வைத்தார்.

இந்த நிலையம் 25 சதுர கிலோ மீட்டர் சுற்றளவில் நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு உதவும்.

இதற்கு முன்னர் வேலூர், திருச்சி ஆகிய இடங்களில் இத்தகையநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று கொடைக்கானல், கும்பகோணம், கோயம்புத்தூர் நெய்வேலி ஆகிய இடங்களிலும் இத்தகைய நிலையங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

## "கிளிநொச்சியின் கல்வி முன்னேற்றத்திற்காக ஆசிரியர்உழைக்கவேண்டும்"

[கிளிநொச்சி]

கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருந்துவரும் கிளிநொச்சி மாவட்டத்தில் பணிபுரிந்துவரும் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர்களாக நியமிக்க எடுக்கப்படும் முயற்சி வரவேற்கத்தக்கதாகும். இம் முயற்சி வெற்றிபெறவேண்டுமென நாம் வேண்டுகிறேம்.

இவ்வாறு பரந்தன் கல்வி வட்டார ஆசிரியர்கள் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிதிச்செயலாளரும்அதிபருமான.திரு.நா.சோதிநாதன் குறிப்பிட்டார்.

திரு. சோதிநாதன் தொடர்ந்து பேசுகையில் "ஆசிரியர்கள் வேறுபாடுகளை மறந்து கிளிநொச்சி மாவட்ட கல்வி முன்னேற்றத்தில் பெரும் அக்கறையுடன் உழைக்க வேண்டும். பரந்தன் கல்விவட்டார ஆசிரியர்கள் பலவித கஷ்டங்களின் மத்தியில் சேவை செய்கின்றனர். இவர்களுடைய கஷ்டங்கள், குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். ஆசிரியர்களுக்குள்ள துன்பங்களை நிவர்த்தி செய்ய தமிழராசிரியர் சங்கம் பாடுபடும்" என்று கூறினர்.

## ஆடிப்பூர உற்சவம்

[ஊரெழு]

காங்கேசன்துறை முதலி வளவு ஸ்ரீ முத்துமாரிஅம்மன் கோவிலில் ஆடிப்பூரத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க் கிழமை பகல் விஷேட அபிஷேகமும், பூசையும் நடைபெறவிருக்கின்றன. இரவு கோவில் வீதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது.

## கந்தவன. .

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

வாழ்க்கை வாழ்ந்தார். பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்திருக் கோயிலை புதுப்பிக்கும் பணியில் அவருடைய பங்கு அளப்பரியது.

1953-ம் ஆண்டு ஆடிமாதம் அத்த நட்சத்திரத்தில் கூத்தப்பெருமான் திருவடியை அடைந்த நம் சைவப்பெரியார் எத்தனையோசைவமக்கள் உள்ளங்களில் தெய்வமாக விளங்குகின்றுர்.

[நன்றி "சைவப்பெரியார் நூற்றுண்டு விழாமலர்"]

## சீருடைகள் வழங்கப்பட்டன

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலும். கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான சீருடைகளை யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் வழங்கியுள்ளது.

## உருளைக்கிழங்குச் செய்கை

(மாவிட்டபுரம்)

வலி வடக்குப் பகுதியில் இம்முறை உருளைக்கிழங்குச் செய்கையை பெரும் அளவில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை கீரிமலை கமநல சேவை நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு வடபகுதி விவசாயிகளுக்கு தரம்குறைந்த விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டதால், விவசாயிகளது உருளைக்கிழங்குச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியது.

இம்முறை விவசாயிகளுக்கு தரமான விதை உருளைக்கிழங்கைப் பெற்றுக் கொடுக்கவும் உருளைக்கிழங்குச் செய்கை குறித்து ஆலோசனைகள் வழங்கவும் விவசாயப்பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

வலி வடக்குப் பகுதியில் விதைஉருளைக்கிழங்கு தேவைப்படும் விவசாயிகளை ஆகஸ்ட் 10ம் திகதிக்கு முன்னர் தமது பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தரிடம்விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

கமக்காரர் ஆளடையாள அட்டைகளை சமர்ப்பித்து தமக்கு தேவையான விதை உருளைக்கிழங்கை பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "யாழ்ப்பாணத்துக்கு தரமான பம்பாய் வெங்காயம் அனுப்பிவைக்கவும்!"

## வர்த்தக அமைச்சருக்கு கோரிக்கை

(புலோலி)

யாழ். மாவட்டப் பாவனையாளர்களின் நன்மைகருதி இறக்குமதி செய்யப்பட்ட பழுதடையாதநல்ல பம்பாய்வெங்காயத்தை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட பாவனையாளர் சங்கங்களின் சமாஜத் தலைவர் பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறியைக் கேட்டுள்ளார். அவரால் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"யாழ் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு இருக்கும் இறக்குமதி செய்யப்பட்ட பம்பாய் வெங்காயம் பழுதடைந்தனவாகவும் தரமற்றதாகவும் இருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் பழுதடையாத நல்ல பம்பாய் வெங்காயம் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் கொழும்புக்கும் ஏனைய இடங்களுக்கும் அனுப்பப்பட்டு, எஞ்சியுள்ள பழுதடைந்த பம்பாய் வெங்காயமே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாக அனுமானிக்க வேண்டியுள்ளது.

"இங்கு அனுப்பி வைக்கப்படும் பம்பாய் வெங்காயம் பழுதடைந்ததாக இருப்பதனால் இப்பகுதி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் நட்டமடைவதுடன், பாவனையாளர்களும் பாதிப்படைய வேண்டியிருக்கின்றது. எனவே இக்குறைபாட்டை நீக்கி பாவனையாளர்களுக்கு உதவு முகமாக யாழ்ப்பாணத்திற்கும் பழுதடையாத நல்ல பம்பாய் வெங்காயத்தை அனுப்பி வைக்க ஆவன செய்ய வேண்டும்."

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர். கொழும்பு கூட்டுறவு மொத்த விற்பனைநிலைய முகாமையாளர், யாழ். கூட்டுறவுமொத்த விற்பனை நிலைய முகாமையாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# இணுவிலில் பலியானவர் அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஒருவரின் சடலம், நேற்றுமாலை யாழ். அரசினர் ஆஸ்பத்திரி பிரேதச் சாலைக்குக் கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.


இச்சடலம், ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தைச் சேர்ந்த கடற்படை வீரர் குமாரசாமி பாலக்குமார் (33 வயது) என்பவருடையதென்று அடையாளம் காணப்பட்டது.


நேற்றுக்காலை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக நமது மாவிட்டபுரம் நிருபர் தெரிவிப்பதாவது:

"இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வீதியில், பின்னால் இருகைகளும் கட்டிய நிலையில் நெற்றியிலும், காதிற்குள்ளும் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சடலமொன்று காணப்பட்டது. இறந்தவர் நீளக் காற்சட்டையும் ஷேட்டும் அணிந்திருந்தார். பொலிசார் நேற்றுப் பிற்பகல் சடலத்தை எடுத்துச் சென்றனர்"

(க)



பாடசாலைகளுக்கு ஓர் அழைப்பு.... அழைப்பது

லக்ஸ்பிறே.

உலகின் அதிநவீனமயமானதும், விசாலமானதுமான பாற்பவுடர் அடைக்கும் தொழிற்சாலை இயங்கும் விதத்தை நேரடியாகப் பார்வையிட ஓர் அரிய வாய்ப்பு. நான்கு மாதங்களுக்கு நீடிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

அதுமட்டுமா? வருகை தரும் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் போஷாக்கு நிறைந்த குளிரூட்டப்பட்ட ஜில்லெனும் "லக்ஸ்பிறே" ஒரு கிளாஸ் பருகுவதற்கும். உங்கள் வருகையின் ஞாபகச் சின்னமாக எடுத்துச் செல்ல அழகான, வர்ணங்களிலான "லக்ஸ்பிறே ஸ்டிக்கர்" ஒன்றும் அன்பளிப்பு செய்யப்படும்.







உங்கள் அழைப்புக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:-

நிர்வாக அதிகாரி லங்கா மில்க் ஃபுட்ஸ் (சீ.டபிள்யூ.ஈ) லிமிட்டெட், வெலிசர.

லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாந்தி** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30
சிவாஜி - பத்மினி
**பேசும் தெய்வம்**
(புதிய பிரதி)

**ராணி** (யாழ். நகர்)
இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி - சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**
1-8-84 முதல்
**அன்புச் சகோதரர்கள்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்-மஞ்சுளா
**உலகம் சுற்றும் வாலிபன்**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
**when time ran out**
1-8-84 முதல்
**என் தம்பி**

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 12-30, 2-30
4-30, 6-30,
நேயர்களின் அமோக வேண்டுகோளிற்கிணங்க 1ம் திகதிவரை நீடிக்கப் பட்டுள்ளது.
Sylvia Kristel
Nicholas Clay in
LADY CHATTERLEY'S LOVER
(strictly for adults)

**வின்சர்** (யாழ். நகர்)
Daily 10-30, 2-00.
4-30, 7-00
30th — to 31st
HEROES OF TELE MARK
The academy award winners
Starring
Kirk Douglas
Richard Harris
(Colour-panavision)

மீண்டும் ...கடைசித் தடவையாக
**றீகல்** (யாழ். நகர்)
31-7-84 வரை
Henry Febar...
EYE OF THE NEEDLE
ஜேம்ஸ் பொன்ட் படத்தைப் பார்ப்பதுபோன்ற பிரமை. .எதற்கும் கலவரப்படாமல் கச்சிதமாக காரியத்தை முடிக்கும் பயங்கரமான ஒற்றன். ஜேர்மனிய இரகசிய உளவாளியின் நடவடிக்கைகள் - விறுவிறுப்பு - சஸ்பென்ஸ்
Adults Only

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
30—31
சிவாஜி-விஜயா
**எதிரொலி**
From 1st.
THE "BURNING"
Strictly for Adults
(Color)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 4-30, 7-00
**I WITNESS**
(Strictly for Adults Thrilling)

# இன்றைய பலன்

மாதம்-ஆடி
திகதி-16(31-07-1984)
வாரம்-செவ்வாய்
திதி-திருதியை முற்பகல் 11-53 வரை
நக்ஷத்திரம்- பூரம்முன்இரவு 10மணி 16நிமிடம்வரை

மேடம்:- துன்பத்தின் ரேகைகள் படரும் எதற்கெடுத்தாலும் சிறிவிழுவீர்கள் கொடுக்கல் வாங்கல் மூலம் தொல்லைகள் தோன்றும் தொழில்துறையிலும் தொல்லைகள் தோன்றக்கூடும்.

இடபம்:- திருப்திகரமான முன்னேற்றம் உண்டு பிறருடைய நன்மதிப்பை பெறுவீர்கள் கல்வித்துறையில் சிறப்பான தினமாகும்.

மிதுனம்:- தூக்கம் விழிகளைத் தழுவமறக்கும் கடந்தகாலஎண்ணங்கள்அலைமோதும் அடுத்துக் கெடுப்பதற்குச் சிலர் முனைவர்.

கடகம்:- வாழ்வில் இன்று வெற்றித்திரு நாளாகும் எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும் வெளியிடத் தொடர்புகளும் சிறப்பைத் தரும்.

சிங்கம்:- மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம்காட்டுவீர்கள் தாராளமான குணத்தின்மூலம் தனமும் செலவாகும் புண்ணிய யாத்திரை உண்டு.

சன்னி:- பணம் பல வழிகளிலும் செலவாகும் அந்நியர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும்பிரயாணத்தின் மூலம் பொருள் நழுவக்கூடும் நிதானம் வேண்டும்.

துலாம்;- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பப் பிரச்சனைகளில் சுகமான நிலை தென்படும்சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்க டிய செல்வாக்கும் பெருகும்.

விருச்சிகம்:- தொழில்துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு நண்பரின் கடிதம் வேதனையைத் தரலாம் மனத்திடம் வேண்டும்.

தனுசு:- பூமியால இலாபமுண்டு புத்திரர் புகழும்சேரும் உடல் நலம் சிறிது பாதிக்கப் படக்கூடும் உணவு விடயத்தில் அதிககவனம் செலுத்தவும்.

மகரம்:- உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்தநாள் திருப்திகரமான இடமாற்றமும் ஏற்படலாம்.

கும்பம்:- உழைப்பினல் முன்னேற்றம் ஏற்படும் வியாபாரத்துறையில் விருத்தியுண்டு உயர்கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகமான தினம்.

மீனம்:- கண்துடைப்புவேலை நடைபெறும் கால்நடைகளினல் நஷ்டமுண்டு மூத்தசகோதரனின் நடவடிக்கை வேதனையைத்தரும் குடும்பத்தில் உறவுமுறை திருப்திகரமாக இருக்காது.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினி

மாலை
5-30 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 'கோமாளிகள்' உள்ளூர்த்திரைப்படம் (தமிழ்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 விவரணச் சித்திரம் (சிங்களம்)
7-45 'கோட்ரெட்' தீயணைப்புப்படையொன்றின் சாகசப் பணிகள் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 'கோட்ரெட்' தொடர்ச்சி
9-00 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்' (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'பிக்வலி' (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 பிக்வலி தொடர்ச்சி
10-50 நிகழ்ச்சிகள் முடிவு

## வானொலியில் இன்று

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப்பாடல் கே. ஆர். நடராசா
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள்
7 00 கிளாரினட் ஏ. கே. சி. நடராஜன்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்திய மஞ்சரி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்புமுடிவு

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 புராணபோதம் புராணம் பற்றிய விளக்கம்
6-30 மெல்லிசை வனஜா சீனிவாசன்
6-45 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி சாம்போல்

இரவு
7-00 களத்துமேடு
7-15 முகத்தார் வீட்டில் விவசாய நாடகம் எஸ். யேசுரட்ணம்
7-3ʋ உலகச் செய்திகள்
7-40 நாட்டுப் பாடல் கும்மி
7:45 குரல்வகை
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் பக்திப்பாடல்கள்
9-30 பாட்டு- பொன்சுந்தரலிங்கம்
10-30 பஜன்
11-00 ஒலிபரப்புமுடிவு

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
From 29th
Sean Connery in
DIAMONDS ARE FOREVER
(007)
(Color)

# காஷ்மீர் புதிய அமைச்சரவை: 43 உறுப்பினர்கள் ஆதரவு!

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் புதிய முதலமைச்சர் குலாம் மொகமட் ஷா அமைச்சரவைக்கு 43 சட்டமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மாநிலத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 77 ஆகும்.

நேற்று முன் தினம் ஸ்ரீநகரில் நடந்த கூட்டமொன்றில் முதலமைச்சர் ஷாவின் ஆதரவாளர்கள் 16 பேரும், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 26 பேரும் சுயேட்சையாளர் ஒருவரும் தமது ஆதரவைத் தெரிவித்துக் கொண்டனர்.

கூட்டத்தின் பின்னர் மாநில வருவாய்த்துறை அமைச்சர் நிருபர்களிடம் இவற்றைத் தெரிவித்தார்.

முதலமைச்சர் ஷாவின் மந்திரிசபை தமது பலத்தை நிரூபிப்பதற்கான மாநிலசட்டசபையின் விசேட கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இவர்கள் 43 பேரும் சட்டசபையிலும் தமது ஆதரவை புதியஅமைச்சரவைக்குத் தெரிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை மாநிலத்தின் முன்னுள் முதலமைச்சர் ஜனுப் பாருக் அப்துல்லா ஸ்ரீநகரில் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் தமது கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்படுவதாகவும், பயமுறுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (சூ)

## உதைபந்தாட்டப் போட்டி

(பச்சிலைப்பள்ளி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆதரவுடன் பளைப் பகுதியிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியில்புலோப்பளைசென்பீற்றர் விளையாட்டுக் கழகத்தைபளை சிறீபதி விளையாட்டுக் கழகம் 6-0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

இப் போட்டிக்கான ஒழுங்குகளை பளை இளைஞர் சேவை அதிகாரி செல்வி வல்லிபுரம் விமலேஸ்வரி மேற்கொண்டிருந்தார்.

## தேக்கு மரநடுகை இயக்கம்

(பச்சிலைப்பள்ளி)

வவனியா மாவட்டத்திலுள்ள சாளம்பைக்குளம் என்னுமிடத்தில் ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் தேக்குமர நடுகை திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட விருக்கிறது.

50 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படும் இத்திட்டத்திற்கான நிதியினை உலகவங்கி வழங்கவுள்ளது.

## விண்வெளியில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் பொருள் பொதிந்தது இந்தப் பிரச்னை பற்றிய சர்வதேச உடன்பாட்டின் ஷரத்துக்கள் சரியாக அமுல் நடத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டியது அவசியம். விண்வெளியிலும் பூமியிலும் வன்முறைப் பிரயோகம் கைவிடப்பட வேண்டும் என்பதற்காக மக்கள் பணியாற்றுவதற்கு, இந்த உடன்பாடு எழுச்சியூட்ட வேண்டும்.

விண்வெளியை இராணுவமயமாக்குவது, அணு ஆயுதப் போர் அபாயத்தை மிகவும் அதிகரிக்கும். எனவே, நிகழ்ச்சிகளின் அபாயகரப் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கு, உயர்ந்தபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றூர்.

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின்

# கேள்வி அறிவித்தல் - 1984

கீழே குறிப்பிடும் கடைகளுக்கு சீல் வைத்த கேள்விகள் 15-8-84ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கீழ்க்குறிப்பிடும் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டு என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப் பத்திரங்களும், தேவையான விபரங்களும் அந்தந்த உப அலுவலகங்களில் 14-08-84ந் திகதிய நண்பகல் 12-00 மணிவரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | கடைகளின் எண்ணிக்கை | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக் குறைந்த கேள்வி ஒவ்வோர் கடைக்கும் | கேள்வி வைப்பு | கேள்வி பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| 1. சுன்னுகம் பட்டினம் மத்திய சந்தைக் கடை இல: 50 | 1 | 25,000/- | 250/- | 25/- |
| 2. பண்டத்தரிப்பு பட்டினம் நவீன சந்தை வெளிப்புற கடை இல: 1, 2 | 2 | 20,000/- | 250/- | 25- |
| 3. நயினுதீவு உப அலுவலகம் சந்தைக் கடைஇல | 3 | 250/- | 100/- | 10/- |
| 4. நெல்லியடி உப அலுவலகம் இராஜகிராமக் கடைகள் | 2 | 500/- | 100- | 10/- |
| 5. அச்சுவேலி உப அலுவலகம் சந்தைக் கடை | 1 | 3,000/- | 100/- | 10/- |
| 6. காங்கேசன்துறை உப அலுவலகம் சந்தைக் கடை | 4 | 3,000/- | 100/- | 10/- |

செயலாளர்
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

யாழ். அபி. சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1984-07-27.

1127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடஇடிபாடுகளுக்குள் கண்டெடுத்த எலும்புத் துண்டுகளை ஒப்படைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கக் கட்டிட இடிபாடுகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட எலும்புத்துண்டுகளை சமயாசார முறைப்படி கிரியைகள் செய்ய தம்மிடம் ஒப்படைக்குமாறு காலஞ்சென்றவரின் சகோதரர் பொலிசாரிடம் கேட்டுள்ளார்.

கட்டட இடிபாடுக்குள் எலும்புகளுடன் காணப்பட்ட கைக்கடிகாரம் காணுமல் போன தமது சகோதரனுடையதென்று சில தினங்களுக்குமுன் இவர் பொலிசாருக்கு அடையாளம் காண்பித்திருந்தார்.

இடிபாடுகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட12 எலும்புத் துண்டுகள் மனித எலும்புகளா? என்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டவைத்திய அதிகாரிபணிக்கப்பட்டுள்ளார்.

சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கை இன்னும் யராததினுலும், இடிபாடுகளுக்குள் உள்ள தலைஎலும்புகள் இன்னும் கண்டெடுக்கப்படாததினுலும் பொலிசார் எவ்வித முடிவும் எடுக்கவில்லை.

இன்னும் இரண்டு மூன்று வாரங்கள் கழிந்த பின்னரே முடிவு எடுக்கப்படும் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு வாரத்திற்கு பின் வருமாறு பொலிஸார் தம்மிடம் கூறியதாக சகோதரரான த. கனகராசா நேற்று தெரிவித்தார்.

'ஏப்ரல் 10ம் தேதி சங்கத்திற்கு வந்தபோது ரட்ணசோதி என்ற ஊழியர் தமது சகோதரன் நவரட்ணராஜாவை அன்று காலை கண்டதாக கூறியபடியாலே, இடிபாடுகளுக்குள் தேடிப்பார்க்கவில்லையென்றும், அவர் வேறு எங்கோ மரணமாகி அடையாளம்காணப்படாத சடலங்களுடன் எரிக்கப்பட்டிருக்கலாம் என நம்பியிருந்ததாகவும் த. கனகராசா தெரிவித்தார். (க)

## கிராமசேவை அலுவலர் அதிகாரங்கள்

[ஊரெழு]

சுன்னுகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ். இராசலிங்கம் தனது பகுதிக்குட்பட்ட கிராமசேவை அலுவலர்களை அழைத்து தனது அலுவலகத்தில் மகாநாடொன்றை நடத்தினுர்.

நாட்டில் தற்போதுள்ள நிலைமையில், பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபட வேண்டியிருப்பதால், அவர்களது கடமைகள் சிலவற்றை கிராமசேவை அலுவலர்கள் செய்வது அவசியமாக விருப்பதாக மகாநாட்டில் எடுத்துக்கூறப்பட்டது.

இந்தவகையில் கிராமங்களில் நடைபெறும் சிறுகுற்றச் செயல்களை, பொலிஸ் நிலையம் செல்லாமலே அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்கள் பொலிஸ்- பொதுமக்கள் நல்லுறவுச்சபையின் உதவியுடன் தீர்த்துவைக்க வேண்டும் எனவும்' வழக்கு விசாரணை தொடர்பாக நீதிமன்றங்களினுல் அனுப்பப்படும் கட்டளைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு கிராமசேவை அலுவலர்கள் மூலமாக விநியாகிக்க வேண்டும் எனவும் இயன்றவரையில் கிராமங்களில் பிரச்னைகள் ஏற்படாமல் அமைதியான சூழ்நிலையில் நிலவும் வகையில் கிராமசேவை அலுவலர்கள் கவனித்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எடுத்துக் சொன்னுர்.

## இன்று

(சுண்டிக்குளி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரசித்திபெற்ற ஜெயந்தி நகர் மீனுட்சி அம்பாள் ஆலய உற்சவ இறுதித் திருவிழா இன்று நடைபெறுகிறது.

## வேதாகமப் பாடசாலை

(நெடுந்தீவு)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் செங்கலடி சேகரப் பிரிவில் உள்ள கிரான் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் இன்று தொடக்கம் ஆகஸ்ட் மூன்ருந் திகதிவரை விடுமுறை வேதாகமப் பாடசாலை நடைபெறவள்ளது.

இதற்கான ஒழுங்குகளை அருட்திரு. ஜோன் ஜெகசோதி செய்துள்ளார்.

இறுதி நாளன்று பொருட்காட்சியும் கலைவிழாவும் நடைபெறுவதுடன், பங்கு பற்றியவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

## 'சைவபோதம்' இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் எழுதிய சைவபோதம் முதலாம்பாகம் வெளியீட்டுவிழா இன்றுகாலை தெல்லிப்பழைதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

இந்துசாதனப் பத்திராதிபர் நம. சிவப்பிரகாசம் வெளியீட்டுரை நிகழ்த்துவார். சைவப் பெரியார் சபையைச் சேர்ந்த பிரமுகர்கள் முதல் பிரதியைப் பெறுவார்கள்.

## சுவரொட்டிப் போட்டி

(கல்வியங்காடு)

சர்வதேச இளைஞர் ஆண்டு சுவரொட்டிப் போட்டியை தேசிய இளைஞர் சேவை மன்றம் நடாத்தவுள்ளது.

இச் சுவரொட்டிப் போட்டியில் 17 வயதுக்கும் 29வயதுக்கும் உட்பட்டவர்கள் பங்குபற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்த விழா

(நெடுந்தீவு)

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாணத் திருமண்டலம் தனது இம்முறைய வருடாந்த பிள்ளைகள் விழாவை உடுவில் பெண்கள் உயர்நிலைக் கல்லூரியில் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது.

இவ்விழா எதிர்வரும் 4ம் திகதி காலை அனைத்துத் திருச்சபைகளின் காட்சி ஊர்வலத்துடன் ஆரம்பமாகும்.

பேராயர் அருட்பெருந்திரு டி. ஜே. அம்பலவாணர் விழாவை ஆரம்பித்துவைப்பார்.

## இலங்கையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம் அவர்களை நசுக்க முயல்கிறது என்றும் குறிப்பிட்டார்.

''இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவாக உலகம முழுவதினதும் அபிப்பிராயத்தைப்பெறவேண்டும்'' என்று இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவர் திரு. கிருஷ்ண ஐயர் திருச்சியில் இந்திய - இலங்கை தமிழர் சங்கம் ஏற்பாடுசெய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இலங்கையில் ஜனநாயகமும் மனித உரிமைகளும் தொடர்ச்சியாக மீறப்பட்டு வருதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டார். (சூ)

## பிரிட்டனின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டிருப்பதாவது:-

''இலங்கையில் உள்ள பயங்கரவாதிகளை முறியடிக்க பிரிட்டன் இராணுவ உதவியை வழங்காது; ஆயினும் ஆயுதங்களை வழங்கும்'' என பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு எழுதியகடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளதை தமிழீழ விடுதலைஅணி வன்மையாகக் கண்டிக்கிறது

ஜனநாயக பாரம்பரியங்களின் தாயகம் என அழைக்கப்படும் பிரிட்டன் இவற்றைக் கண்டிப்பதை விடுத்து அரசுக்கு ஆயுதஉதவி வழங்குவதன்மூலம் உடந்தையாக இருக்கப்போகிறதா?

கடந்த வருடம் ஜூலைக் கலவரத்தில் ஆயிரக்கணக்கில் தமிழர் கொலைசெய்யப்பட்டபோதும் அதன் பின் தமிழ்ப்பகுதிகளில் அப்பாவித் தமிழர்களை ஆயுதப்படைகள் கொன்றபோதும் எவ்வித கண்டனத்தையும் தெரிவிக்கத பிரிட்டிஷ் அரசு, இன்று ஆயுதங்களை வழங்க எடுத்த முடிவு கண்மூடித்தனமான [illegible] படவேண்டியதுமாகும்''. (க)

# நவீன மார்க்கட் 3-ம் கட்டம் இன்று ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நவீன மார்க்கட் மூன்ரும் கட்ட வேலை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

நவீன மார்க்கட் 3.ம் கட்டட வரைபடம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டது. இந்த வரைபடம் தொடர்யாக இன்று ஆலோசனை செய்பப்படும்.

3-ம் கட்டம் அமையப் போகும் பகுதியில், தற்போது கடைகள் வைத்திருப்பவர்கள் பற்றியும அவர்களுக்குப் பாதிப்பு எதுவுமின்றி தற்காலிக ஏற்பாடு செய்வதுபற்றியும் இன்று ஆலோசிக்கப்படுமெனக் கூறப்படுகிறது. [க]

## அமிர் சிவா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் இரண்டாவது மன்றம் அமைக்கும் ஆலோசனையை ஜனுதிபதி சர்வகட்சி மகாநாட்டில் முன்வைத்திருந்தது குறித்து ஆராய்வதற்கு நேற்று திரு. சிவசிதம்பரமும் திரு. அமிர்தலிங்கமும் கொழும்பு செல்லவிருந்தனர்.

ஏற்கனவே சென்ற திருமலை முன்னுள் எம். பி. திரு. இரா சம்பந்தன், கலாநிதி நிலன் திருச்செல்வம் மற்றும் கூட்டணியின் முக்கிய உறுப்பினர்கள் கொழும்பில் தங்கி இருக்கின்றனர். (மா)

## யாழ். புகையிரத..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்ரசிற்றியில் வந்து கொண்டிருந்த பிரயாணிகள் இறங்கியதும், என்ஜின் கொழும்பு நோக்கிச் செல்ல அடுத்த பாதையில் திருப்பி நிறுத்தப்பட்டது. ரயிலில் பாதுகாப்புக்காக வந்த பொலிஸ் அதிரடிப்படை பிரிவினர் பிளாட்பாரத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதேசமயம், யாழ். பொலிஸ் அதிரடிப்பிரிவினர் புகையிரத நிலையத்தின் முன்பக்கமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர்.

நண்பகல் 12-10 மணியளவில் திடீரென முன்பக்கமாக இனம்தெரியாத நபரினுல் ஒரு குண்டு வீசப்பட்டது. அங்கு நின்றவர்கள் நாலாபக்கமும் சிதறி ஓடத் தொடங்கினுர்கள். வாகனங்களும் நின்ற இடத்தைவிட்டு வேகமாக எடுத்துச் செல்லப்பட்டன. கொழும்பு செல்ல டிக்கட் எடுத்தவர்களில் பிளாட்பாரத்தில் நின்ற சுமார் 100 பேர் அவசரம் அவசரமாக ரயினுள் ஓடிச்சென்று அமர்ந்து கொண்டார்கள்.

பிளாட்பாரத்தில் நின்ற பொலிசார் வாசலில் போடப்பட்டிருந்த இரும்புக் கதவுகளை இழுத்துப் பூட்டிவிட்டு கடமையிலிருந்த உத்தியோகத்தர்கள் எல்லோரையும் அறைகளுக்குள் இருக்குமாறு பணித்தார்கள். முன்பக்கம் காவலில் நின்ற பொலிசார் குண்டு வீசப்பட்ட இடத்தை நோக்கியும் ஆகாயத்தை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினர்.

அடுத்து இரண்டாவது குண்டு 12-30 மணியளவில் புகையிரத நிலையத்தின் கிழக்குப் பக்கமாக வீசப்பட்டது. குண்டு வெடித்த இடத்தை நோக்கி புகையிரத மேடையில் நின்ற பொலிசார் 10-க்கு மேற்பட்ட தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனுல் புகையிரதப் பகுதியின் பாதை ஊழியர் காரியாலயத்தின் மேற்குப் பக்கச் சுவரில் துப்பாக்கிக் குண்டுகள் பதிந்திருக்கக் காணப்பட்டன.

இரண்டாவதுகுண்டுவெடித்ததும், அதனைத் தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிகளினுல் சுட்டதும் புகையிரதநிலையப் பகுதி மட்டுமல்ல, யாழ் நகர் பகுதியிலேயே பெரும்பீதி ஏற்பட்டது.

ஒருமணிவரை இன்ரசிற்றி அங்கு நிற்காமல் 12-40க்குப் புறப்பட்டது.

டிக்கட் எடுத்திருந்தும் கொழும்பு செல்லமுடியாத பிரயாணிகள் திரும்பவும் தங்கள் டிக்கட்டுகளைக் கொடுத்து பணத்தைப் பெற்றுச் சென்றனர். (மா)

## வீதியின் அவலநிலை

(நெடுந்தீவு)

ஆனைக்கோட்டை - நவாலி - வட்டுக்கோட்டை வீதி கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக குண்டும் குழியுமாக பாதசாரிகளுக்கும், வாகனங்களுக்கும் பெரும் இன்னலை ஏற்படுத்தி வருகின்றது.

சுமார் ஐந்து மைல் நீளம் உள்ள இந்த வீதியால் தினசரி ஆயிரக்கணக்கானேர் பிரயாணம் செய்கின்றனர்.

இவ்வீதியில் சில இடங்களில் திருத்தம் செய்வதற்காக பல மாதங்களுக்கு முன்னர் கற்கள் போடப்பட்டிருந்தும், அக்கற்களும் சிதறுண்டுள்ளன.

## பாவனையாளர் சங்கங்கள் புனரமைப்பு

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாவனையாளர் பாதுகாப்பு சங்கங்கள் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் விடுத்த சுற்று நிருபத்திற்கிணங்க இச் சங்கங்களை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

## கடற்படை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைசெய்தபின் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 4 வயது மகனுடன் சலூனுக்கு சென்று கொண்டிருந்ததாகவும் அப்போது இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து மகனிடம் 'நீர் வீட்டிற்கு போம், அப்பாவை பிறகு அனுப்பிவைக்கிருேம்' என்று கூறிவிட்டு 4 வயது மகனை வீட்டுக்கு அனுப்பியதாகவும் மகன் வீட்டுக்கு சென்று தாயாரிடம் நடந்தவற்றை கூறியதாகவும் கூறப்படுகிறது.

இறந்தவரின் நெஞ்சில் ஒருவர் துப்பாக்கியைக் குறிவைக்க மற்றவர், பின்பக்கத்தால் இருகைகளையும் கயிற்றினுல் கட்டியபின் மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏற்றிக் கொண்டு மூவரும் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இணுவில் பிள்ளையார் கோவிலடியில் நெற்றியிலும் காதுக்குள்ளும் சுடப்பட்டதாகவும் அவர் கீழே விழுந்ததும் மோட்டார் சைக்கிள் சென்றுவிட்டதாகவும் மேலும் கூறப்படுகிறது.

இறந்தவரின் தந்தை பொன்னையா குமாரசாமி, இறந்தவரை பொலிசாருக்கு அடையாளம் காட்டியதுடன் சாட்சியமுமளித்தார்

இறந்த பாலகுமார் கடற்படையில் 12 வருடம் சேவையாற்றியதாகவும் முதன் முதலில் திருகோணமலை கடற்படைப் பிரிவில் சேர்ந்து பின் கொழும்பில் கடமையாற்றி இரு வருடத்திற்குமுன் காரைநகர் வந்ததாகவும் கூறப்படுகிறது. [க]


## மரணஅறிவித்தல்

### திருமதி செல்லாச்சிப்பிள்ளை

காரைநகர் களபூமியைச் சேர்ந்த செல்லாச்சிப்பிள்ளை காலமாகிவிட்டார், இவர் காலஞ்சென்ற இராமுப்பிள்ளையின் அன்பு மனைவியும் சின்னம்மா, தில்லையம்பலம், ஆறுமுகம், வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம், வவனியா, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி கே. ஆர். கந்தசாமி அன்கோ ஸ்தாபனங்களின் உரிமையாளர்கள் கந்தசாமி, கந்தையா ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை, செல்லம்மா, அமுதமணி ஆகியோரின் மாமியும், சிதம்பரப்பிள்ளை, தனபாலன், பேரின்பமலர், ஸ்ரீஹரன், ஸ்ரீபரன், ஸ்ரீதரன், ஸ்ரீகுமார் ஆகியோரின் பேத்தியும் ஆவர். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (31-7-84) காலை 9-00 மணிக்கு அவரது காரைநகர் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(1137) இ. கந்தசாமி.


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org